**<u>அசல் வழக்கு எண். 239/2019</u>**

10.06.2025

**பெயர் – சிவக்குமார் (Pw1)**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1) 10.03.2017 ம் தேதி தாவாச் சொத்தைப் பொறுத்து நான் ஒரு கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். எனக்கு எனது மனைவி ஆனந்தி கிரையம் கொடுத்தார். எனது மனைவிக்கு சொத்து எப்படி வந்தது என்ற ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன். பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனது மாமியார் பாக்கியம் என்பவர் பெயரில் உள்ளது. பட்டாவின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மாமியார் எனது மனைவி பெயரில் செட்டில்மெண்ட் எழுதி வைத்த வகையில் எனது மனைவிக்கு பாத்தியம். செட்டில்மெண்ட் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(2) எனது மாமியார் பெயரில் உள்ளதாக சொல்லும் பட்டா போலி என்பதால் தான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மாமியார் 2017 ம் வருடம் எனது மனைவி பெயரில் செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். தேதி தெரியவில்லை. அதே சமயத்தில் நான் கிரையம் எழுதி வாங்கினேன் என்றால் 10.03.2017 ம் தேதி நான் கிரையம் பெற்றேன். நேரடியாக நான் ஏன் எனது மாமியாரிடம் இருந்து கிரையம் பெறவில்லை என்றால் எனது மாமியார் எனது மனைவி பெயரில் உள்ள அன்பினால் மற்றும் எனது மனைவியின் சகோதரிகள் பிரச்சனை செய்துவிடக்கூடாது என்று செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் அதை நான் கிரையம் பெற்றேன். வழக்கிற்காக புதிதாக காரணம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(3) எனது மனைவியிடம் இருந்து செட்டில்மெண்ட்டாக பெறாமல் கிரையம் எதற்காக வாங்கினேன் என்றால் கிரையம் பெற்றால் எனது மனைவியின் சகோதரிகள் மற்றும் அவரது குடும்பத்தார் பிரச்சனை செய்யமாட்டார்கள் என்று நான் கிரையம் பெற்றேன். எனது மாமியார் பெயரில் பட்டா கொடுக்கப்பட்ட இடத்தின் சர்வே எண் 656/E1 ஊர் நத்தம். சர்வே எண் 656/E1 அதே காலையில் தான் சக்தி விநாயகர் சிவகாம சுந்தரி

சமேத நடராஜர் திருக்கோவில் சுமார் 200 வருடங்களாக இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா இடம் தவிர வேறு இடம் எனக்கு பாத்தியம் உள்ளது என்றால் வேறு இடம் உள்ளது. அந்த இடத்தை தான் முதலில் 2012ம் ஆண்டு முபாரக் அலி என்பவரிடம் இருந்து அவரது முகவர் வெள்ளைச்சாமியிடம் இருந்து கிரையம் பெற்றேன். நான் ஏற்கனவே தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 56/2018 வழக்கில் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி தரப்பினர் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி தூண்டுதலின் பேரில் தான் அந்த வழக்கின் பிரதிவாதிகள் என்னை தொந்தரவு செய்தார்கள். இரண்டு வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல இரண்டு சொத்துக்களும் ஒட்டி உள்ளது. அந்த இடம் புறம்போக்கு இடமாக இருந்து நான் பட்டா பெற்றது என்றால் சரியல்ல. அது பட்டா பூமி அதன் சர்வே எண். 666/A4. அந்த இடத்தில் நான் வீடு கட்டிவிட்டேன் அரசாங்க தொகுப்பு வீடு கட்டி உள்ளேன்.

(4) தாவா இடம் நத்தம் நிலவரித் துாய பட்டா திட்டத்தில் STT கோவில் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. எனது மாமியாரின் சொந்த ஊர் என்ன என்றால் பொள்ளாச்சி நாட்டுக்கல்பாளையம். பொதுவாக நிலம் இல்லாதவர்களுக்கு பட்டா வழங்கும் போது அதே ஊரைச் சேர்ந்தவர்களுக்கு தான் பட்டா வழங்கப்படும் என்றால் சரியல்ல. தாவா இடம் ஏற்கனவே கோவில் நிலமாக இருந்ததால் யாருக்கும் பட்டா தரவில்லை என்றால் சரியல்ல. குறுகிய காலத்தில் வேண்டுமென்றே மூன்று ஆவணங்கள் தயார் செய்துள்ளேன் என்றும், போலியான பட்டாவை உறுதி செய்து கொள்வதற்காக உருவாக்கப்பட்டவை என்றால் சரியல்ல. கோவில் இடத்தை ஆக்கிரமிப்பு செய்ய வேண்டி நான் போலியாக பட்டா தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது சொத்தின் பக்கத்தில் அதே காலையில் வேறு என்ன சொத்துக்கள் உள்ளது என்றால் அந்த சர்வே எண்ணில் எனது சொத்து மட்டும் தான் உள்ளது. மீதி தடமாக உள்ளது.

(5) 2 முதல் 4 பிரதிவாதிகளை அரசு அதிகாரிகள் என்ற முறையில் வழக்கில் கட்சி சேர்த்தேன். அரசு அதிகாரிகளை போலி பட்டாவின் மேல் நடவடிக்கை எடுப்பதை தடுப்பதற்காக அவர்களை கட்சி சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தைப் பொறுத்து 24.12.2021ம் தேதி சாதிக் பாட்ஷா என்பவர் திருப்பூர் மாவட்ட ஆட்சியரிடம் நான் தாவாச் சொத்தை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டி உள்ளதாக மனு கொடுத்து அதன்

பேரில் 18.02.2022ம் தேதி மாவட்ட ஆட்சியர் தாவாச் சொத்தைப் பொறுத்து இந்நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்படும் தீர்ப்புரையின் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்க இந்து சமய அறநிலையத்துறைக்கு பரிந்துரைத்திருப்பதாக கடிதம் அனுப்பியுள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எனக்கு அதைப் பற்றி அறிவிப்பு எதுவும் வரவில்லை. விசாரணையும் செய்யவில்லை. கடிதத்தில் தாவாச் சொத்து கிராம ஆவணங்களில் S.F.7 கோவில் என உள்ளதாலும் வழக்கு நிலுவையில் உள்ளதாலும் தீர்ப்புரையின் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்க இந்து சமய அறநிலையத்துறைக்கு அறிவுறுத்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

(6) தாவா இடம் அரசு புறம்போக்கு இடம் என்பதால் தான் மேல்நடவடிக்கை எடுப்பதை தடுக்க அரசு அதிகாரிகளை பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வயோதிகத்தின் காரணமாக கடந்த 6–7 வருடங்களாக வெளியே வருவதில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு என்ன தொழில் என்றால் சிவன் கோவிலில் பூஜை செய்கிறார். தாவாச் சொத்திற்கு 1ம் பிரதிவாதி வந்ததில்லை என்றால் வந்துள்ளார் மூன்றாம் நபர்களை வைத்து தொந்தரவு செய்கிறார். எந்த தேதியில் 1ம் பிரதிவாதி தாவாச் சொத்திற்கு வந்தார் என்றால் தேதி சரியாக தெரியவில்லை. எத்தனை வருடங்களுக்கு முன்பு வந்தார் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை வந்தார் வழக்கு தாக்கல் செய்த பின்பு வரவில்லை.

(7) கோவில் இடத்தைப் பொறுத்து 06.01.1993ம் தேதி ராமநாத சாஸ்திரிகள் என்பவர் பூசாரியாக இருந்தார் என்றும் இனிமேல் சிவாச்சல குருக்கள் பூசாரியாக இருந்து பணி செய்து வரவேண்டும் என்று உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. ஆதியில் இருந்து நான் வருவாய் துறையினருடன் தொடர்பில் இருக்கிறேன் என்றும், அந்த தொடர்பின் அடிப்படையில் அவர்கள் உதவியுடன் போலியாக பட்டா தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தை சுற்றியுள்ள இடத்தை நான் பட்டா வாங்குவது போல் எடுக்க முயற்சி செய்வதை வருவாய் துறையினர் தடுக்கக்கூடாது என்று நான் அவர்கள் வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் வயதை வேண்டுமென்றே குறைத்துக் காட்டியுள்ளேன் என்றும் அவருக்கு 80 வயதிற்குமேல்

ஆகிறது என்றும் அவர் நடமாடும் நிலையில் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அடியாட்களுடன் வந்து தொந்தரவு செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தைப் பொறுத்து வங்கியில் கடன் பெற்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா இடம் கோவில் இடம் என்றும் நான் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்ட முயற்சி செய்து போலி பட்டா தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. SF 7 இடம் கோவில் இருப்பதால் பட்டா செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவாச் சொத்து சம்மந்தமாக வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்